<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 79/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கணேஷ்ராம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : கருப்புசாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.09.2024

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது நீலகிரி வரையாடு திட்டத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு திருப்பூர் வனக்கோட்டத்தில் உதவிவன பாதுகாவலராக பணியில் இருந்த போது 29.08.2021 ம் ஆண்டு உடுமலை வனச்சரகம் தடுப்பு பிரிவவு கரட்டுர் சுற்று சடையம்பாறை சரவு பகுதியில் வனப்பணியாளர்கள் ரோந்து பணி மேற் கொண்டிருந்த போது சுமார் காலை 8.00 மணியளவில் ஒரு யானை வலது பக்க சாய்ந்த நிலையில் இறந்த நிலையில் கண்டுபிடித்தனர். அந்த யானையின் இடது பக்கம் தந்தம் ஆனது திருடப்பட்டிருந்தது. தகவல் கிடைகக் பெற்ற உடன் பொள்ளாச்சி துணை இயக்குநர் பொறுபபு அவர்கள் உடுமலை வனச்சரகர் அலுவலர் தனபால் வன கால்நடை மருத்துவர் சுகுமார் அவர்கள் மற்றும் கரட்டுர் அரசு கால்நடை மருத்துவர் அரவிந்த் ஆகியோருடம் சம்பவ இடத்தி'கு சென்று தணிக்கை செய்த போது அந்த யானை ஒத்தக் கொம்புடைய ஆண் யானை என்று தெரிய வந்தது. மேலும அந்த ஒத்த கொம்பும் களவாட செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

2. பின்னர் மாலை நேரம் ஆகிவிட்டதால் உடல் கூறு ஆய்வு செய்ய

முடியாத நிலையல் 30.09.2021 ம்தேதியன்று சுமார் 11.00 மணியளவில் கால்நடை மருத்துவர்கள் உடல் கூறு பரிசோதனை மேற்கொண்டனர். யானையின் பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வன கால்நடை மருத்துவர் சுகுமார் என்பர் தான் கொண்டு வந்த Metal Detector கருவி கொண்டு ஆய்வு செய்ததில் குண்டு தெரிகிறதா என்று ஆய்வு செய்தார். பின்னர் வனப்பணியளார்க் மற்றும் அந்த ஊர் மக்கள் உதவியுடன் இறந்த யானையை கட்டி இடது புறமாக திருப்பப்பட்டு பின்னர் கடவாற் பல் பகுதியில் உள்ள உள்தந்தத்தை எடுக்க முயற்சி செய்தபோது கண்ணுக்கும் தந்தத்திற்கு' இடைப்பட்ட பகுதியில் 15–18 mm அளவுள்ள பாலிஸ் குண்டு உள் பகுதியில் இருந்து எடுக்கப்பட்டது. அந்த பாலிஸ் குண்டு இருந்த பகுதியில் தசைகள மூடிய நிலையில் இருந்தது. பின் உள்ள உள்தந்தத்தின் அளவு நீளம் 37 செ.மீ சுற்றளவு 34 செ,மீ இருந்நது. பின்னர்வலது கால் தொடை பகுதியில் 3 இடங்களில் தோள் தடிமனாக இருந்தகை கண்டறிந்து அறுத்து பார்த்த போது 8–10 mm அளவுள்ள 3 பாலிஸ் குண்டுகள் இருந்தது.

3. பின்னர் கால்நடை மருத்துவர்கள் ஆய்வுக்கு தேவையான மாதிரிகளை சேகரம் செய்து அந்த இறந்த யானையை மற்ற வன உயிரினங்கள் உணவாக உட்கொள்ள அப்படியே விடப்பட்டது. திரு கோபாலகிருஷ்ணன் ஸ்தல மகசர் மற்றும் சம்பவ இடத்தை காட்டும் வரைபடத்தை பதிவு செய்தார். கரட்டுர சுற்று வனக்காபபாளர் அவர்கள் தனது H நமுனாவில் அந்த தந்தத்தை கைப்பற்றி பதிஹ செய்தார்.சம்பவத்தை தொடர்ந்தது துணை இயக்குநர் சம்பவ தொடர்பாக அரசு பொருட்துறையும் குற்றவாளிகைளை கைப்பற்ற எனது தலைமையில் தனிக்குழு அமைத்தார். இக்குழுவில் உடுமலை வனசரகர் தனபால் , கரட்டுர் பிரிவு வனவர் கோபாலகிருஷ்ணன் இருந்தார். தளி பிரிவு வனவர் தங்கபிரகாசும் இருந்தார். கரட்டுர் வனக்காப்பளார்கள்இதில் அடங்கி இருந்தனர்.

4. சம்பவத்தை தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொண்டு இருந்த நிலையில கடந்த 02.09.2021 ம் தேதி கரட்டுர் பிரிவு கரட்டுர் சுற்று உடைந்த பாலம் சராகம் அருகில் 400 மீ வடக்கு திசையில் வெள்ளை மற்றும மஞ்சள் உர சாக்கு பை பாறை இடுக்கில் சொருகி வைக்கப்பட்டதை கண்டறிந்து தனிக்குழுவுடன அதை பிரித்து பார்த்த போது அதில் ஒற்றை தந்தம்–1 இருந்தது கண்டபிடி நீளம் 128 செ.மீ. சுற்றளவு 34 செ.மீ. தந்தத்தின் அளவீடுகள் சடையம் பாறை சராக பகுதியில் காணாமல் போன யானையின் தந்தத்துடன் ஒத்தி இருப்பதால் களவாடப்பட்ட தந்தம் என்று உறுதி செய்யப்பட்டு, மேல் நடவடிக்ககைகாக உடுமலை வனச்சரகத்தி'கு கொண்டு வரப்பட்டது .

5. தொடர்ந்து குற்றவாளகளை பிடிக்க ரோந்து பணி

மேற்கொண்டிருந்தபோது கடந்த 22.09.2021 ம் தேதியன்று கரட்டுர் பிரிவு கரட்டுர் சுற்று நல்லாறு சராக பகுதியில் ரோந்து பணி மேற்கொண்டிருந்தபோது நல்லாறு ஆட்டு பாறையில் 4 நபர்கள் எங்களை பார்த்தவுடன் ஓட முற்பட்டார்கள். அவர்களை சுற்றி வளைத்து பிடித்த போது 2 நபர்கள் பிடிபபட்டனர். 2 நபர்கள் தப்பி ஓடி விடடனர். அவர்களை விசாரணை செய்ததில் அதில் ஒருவர் பெயர் சின்னப்பன் என்றும். மற்றொருவர் பெயர் வேலு த/பெ. குயினான் என்றும் கூறினார். அவரகள் குழிப்பட்டி செட்டில்மெண்ட்யை சேர்ந்தவர்கள எனறும தெரியவந்தது. மேற்படி விசாரித்தபோது தப்பிய எதிரிகளில் ஒரு வர் பெயர் திருமான த/பெ. காளியப்பன் என்றும், மற்றொரு பெயர் திருமான் த/பெ. மயிலான் என்றும், இவர்களும் குழிப்பட்டி செட்டில்மெண்ட்யை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது.

6. மேலும் பணத்தின் ஆசை காரணமாக சடையன்பாறை பகுதியில் இறந்து கிடந்த ஒற்றை கொம்பு யானையின் கொம்பை வெட்டி எடுத்து உடைந்த பாலம் சராகம் பகுதியில் மறைத்து வைத்ததாக விசாரணையில் தெரியவந்தது. சின்னதங்கம் தானே வந்து கொடுத்த ஒப்பதல் வாக்குமூலுத்தில் தளி பிரிவு வனவர் தங்கபிரகாசும், வேலு தானே வந்து கொடுத்த ஒப்பதல் வாக்குமூலுத்தில் உடுமலை வனச்சரகர் தனபால் என்பவர் எங்களின் முன்னி லையில் ஸ்தலத்தில் பதிவு செய்தார். கரட்டுர் பிரிவு வனவர் அவர்கள் ஸ்தல மகசரையும் சம்பவ இடத்தை காட்டி வரைபடத்தையும தயார் செய்தார்.

கரட்டுர் பிரிவு வனவர் தனது H நமுனாவில் எதிரிகளை பதிவு செய்து மேல் நடடவடிக்கைககா கஉடுமலை வனச்சரகத்திற்கு கொண்டு வரப்பட்டு மறுநாள் குற்றவாளிகளை வனச்சரக அலுவலர் நீதிமன்றத்தில் ஆஜர் படுததி நீதிமன்ற காவலில் வைத்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மின்னல் அறிக்கை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். யானை இறந்த பகுதி சடையம் பாறை சிறிய பகுதி என்றால் சரிதான்.அங்கு வஞ்சி அவரது மகன் கஞ்சியப்பன் குடியிருந்து விவசாயம் செய்து வசிக்கிறார்கள என்றால் அங்கிருந்து 500 மீ தள்ளி வசிக்கிறார்களள். அந்த நேரத்தில் பீன்ஸ் அறுவடைநிலையில இருந்தது என்றால் கொஞ்சம் பகுதி காலியாகயும் மீதி பகுதி பயிரும் இருந்தது. அது பீன்ஸ்ஸா என்று தெரியாது. விவசாயம் செய்த பகுதி ரிசர்வ் forest பகுதி ஒட்டியுள்ளது என்றால் சரிதான். சுமார் 500 மீ தள்ளி உள்ளது.

2. 3,4 ம் எதிரிகள் ஆழியாறு பகுதியில கைது செய்ததற்காக RDO

அலுவலகத்திலும், உங்கள் அலுவலகத்திலும் போராட்டம் நடந்தது என்றால் சரிதான். உரம் பயன்படுத்துவது இல்லை எனறால் சரியல்ல. வானம் பார்த்த பூமி என்றால் சரிதான். யானை இறந்த கிடந்த இடத்திற்கு ஆட்டுபட்டடியில் இருந்து குழிப்பட்டி போச்சம் கொட்டான் பாறை குருமலை மேல் குருமலை ஆகிய ஊர்களுக்கு செல்லும் வழித்தடம் உள்ளது என்றால் சரிதான். 1 கிமீ க்கு உள்ளது. ஒப்புதல் வாக்குமூலம் என்ன மொழியில் கூறிகிறார்களோ அவ்வாறே பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

3. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள வார்த்தை மாதிரி அவர்கள் பேசும் மொழி இருக்காது என்றாடல சரிதான். ரோந்து சம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளிர்களா என்றாட்ல ரேஞ்சருக்கு தான் தெரியும். FRO உத்தரவு போட்டார். குழிப்பட்டி மாவுடப்பு ஆகிய இடங்கிளில் அரசு பள்ளிகள் இயங்கி வருகிறது என்றால் சரிதான். அது போல் காடம் பாறையில அரசு அலுவலகங்கள் உள்ளது என்றால் 20–25 கிமீ தள்ளி உள்ளது.

4. செட்டில் மெண்ட் பகுதியில் எந்த இடத்தில் எந்த திசைநோக்கி அவர்களை துரத்தினிர்கள் என்றால் 4 பேர் 4 திசைகளில் ஓடினார்கள். 2 பேர் பிடித்தோம் எந்த திசை என்று தெரியவில்லை. 2 பேரை யார் யார் பிடித்திர்கள் என்றால் 5 பேரும் சேர்ந்து துரத்தினோம் யார் யார் பிடித்தோம் என்று சரியாக சொட்லல இயலவில்லை. பிடிப்பதற்காக உத்தரவு இல்லை என்றாலும், 3,4 ம் எதிரிகளை நீங்க சொல்வது போல் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் நீங்கள் சொல்வது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் சரியாக சாட்சியம் அளித்திருப்பிர்கள் என்றால் சரியல்ல. யானை இறப்பு என்பது தேசிய பிரச்சனை என்றால் சரிதான். அந்த அழுத்ததை குறைப்பதற்காக தான எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளி்ன தொழில் வனத்தில் தேன் கிழங்குகள் சேகரிப்பது என்றாலும் சரிதான்.

5. உங்களுக்கு தெரியாத பகுதிகள் எதிரிகளுக்கு தெரியும் என்றால் சரிதான். மொத்த பரப்பு எவ்வளவு என்றால் 60 ஆயிரம் ெஹக்டேர். எதிரிகள் ஒரு பொருளை மறைக்க வைக்க வேண்டும் என்றால் உங்களுக்கு தெரியாத பகுதியில் மறைத்து வைக்கும் இயலும் என்றால் சரியல்ல. வழக்ககிற்காக வேறு எங்கோ கிடைக்கப்பெற்ற வழக்கு சொத்தை இங்கு தான கிடைத்ததாக பொய்யாக கூறிகிறிர்கள் என்றால் சரியல்ல. ராவனாபுரம் தேவனுார் புதுார் கிராமங்களில் இருந்த சுமார் 2 மணி நேரத்தில் நடை பயணமாக யானை இறந்த இடத்திற்கு வந்து விடலாம் என்றால்சரிதான். காண்டுர் கணவாய் தாண்டும் பகுதியில் செக்போஸ்ட்

இல்லை என்றால் சரிதான், வேட்டைதடுப்பு முகாம் உள்ளது.

6. எதிரிகள் சொன்ன மாதிரி எந்த சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் எதிரிகளும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மிரட்டி கைரேகை பெற்று கொண்டார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-. T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.